**செ. கு. எண்: 111** **நாள்: 04.05.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.5.2013

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், பெரியநாயகிபுரம் கிராமம் அருகே 26.4.2013 அன்று சென்று கொண்டிருந்த வேன் மீது அரசுப் பேருந்து மோதியதில், சிவகங்கை மாவட்டம், இளையாத்தான்குடி கிராமத்தைச் சேர்ந்த வேன் ஓட்டுநர் திரு. திருமூர்த்தி என்பவர் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா சாலை அருகே 27.4.2013 அன்று சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தின் பின்புறம் அமர்ந்து பயணம் செய்த, தியாகராய நகர், கங்கைகரைபுரம் பகுதியைச் சேர்ந்த திரு. பார்த்தசாரதி என்பவரின் மனைவி திருமதி இந்திராணி பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திம்மராஜம்பேட்டை கிராம நெடுஞ்சாலையில் 30.4.2013 அன்று சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த ஓரிக்கை கிராமம், சதாவரம் பகுதியைச் சேர்ந்த திரு. மன்னார் என்பவரின் மகன் சீனுவாசன் பலத்த

காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திருமூர்த்தி, இந்திராணி மற்றும் சீனுவாசன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திருமூர்த்தி, இந்திராணி மற்றும் சீனுவாசன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**